இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள் சார் கல்வியில் சிறப்புக் கல்விமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

மட்டம் - 5

**SNU 5338** – விசேட நிலைமைகள் மற்றும் கற்றல் தேவைகளுக்கான அறிமுகம்

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 22.10.2023 நேரம்: மு.ப. 01.30 - மு.ப 04.30

பகுதி **I** இன் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கும் மாத்திரம் விடை தருக.

## பகுதி – I

1. இயலாமையுடைய தனிநபர்களுக்கான கல்விச் சட்டத்தின் (IDEA) கீழ் கல்வியைப் பெறத் தகுதியுள்ள பிள்ளைகளின் வகைகளைப் பட்டியலிடுக.

2. காது கேளாதவர்களுக்கும் கேட்பதற்குச் சிரமப்படுவோருக்கும் இடையே தெரியும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளை விவரிக்குக.

3. கடந்த காலத்தில் இயலாமையைக் காரணப்படுத்தாமல் கல்வியில் இருந்து தள்ளிவைக்கப்பட்ட ஐந்து (05) வகை சிறுவர்களின் வகைப்பாட்டைக் குறிப்பிடுக. ஒவ்வொரு வகைக்கும் தலா ஒரு (01) உதாரணம் முன்வைக்குக.

4. வலிப்புத்தாக்கங்களின் இரண்டு (02) பரந்த பகுதிகளைக் குறிப்பிட்டு ஒரு (01) பகுதியை சுருக்கமாக விளக்குக.

5. மூளையில் நீர் தேங்குதலின் (Hydrocephalus) ஐந்து (05) பொதுவான அறிகுறிகளைக் கூறி, மூளையில் நீர் தேங்குதல் எவ்வாறு ஏற்படுகிறது என்பதைச் சுருக்கமாக விளக்குக.

6. "ஒரு குழந்தை இயற்கையான முதிர்ச்சி செயல்முறைக்கு செல்லாத போது ஒலியியல் கோளாறு ஏற்படுகிறது"
ஒலியியல் விழிப்புணர்வை மேம்படுத்த ஒரு ஆசிரியர் வகுப்பறையில் வழங்கக்கூடிய நான்கு (04) உதவிகளை விவரிக்குக.

7. தகவமைப்பு நடத்தைக்கு அவசியமான மூன்று (03) பிரதான திறன்களைப் பற்றி ஆராய்ந்து அவை ஒவ்வொன்றையும் சுருக்கமாக விளக்குக.

00038

8. அவதானக்குறைபாடும் செயலூக்க ஒழுங்கீனமும் (ADHD) மற்றும் நடத்தை ஒழுங்கீனம் (CD) உள்ள குழந்தைகளின் **ஐந்து** (05) இயல்புகளை ஒப்பிடுக.

**(5 x 8 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9.

**i.** அறிவுசார் இயலாமையைக் கண்டறிவதற்கான **இரண்டு** (02) அடிப்படைக் காரணிகளை விவரிக்குக.

**(03 புள்ளிகள்)**

**ii.** அறிவுசார் இயலாமையுடன் தொடர்புடைய **ஐந்து** (05) பண்பியல்புகளைக் குறிப்பிடுக.

**(05 புள்ளிகள்)**

**iii.** அறிவுசார் இயலாமையுள்ளவர்கள் எனக் கண்டறியப்பட்ட மாணவர்களுக்கு வெற்றிகரமான கற்றலை எளிதாக்குவதற்கு செயல்படுத்தக்கூடிய முறைகளை ஆராய்க.

**(12 புள்ளிகள்)**

10.

**i.** பேச்சு ஒழுங்கீனத்திற்கும் மொழிசார் ஒழுங்கீனத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடுகளை விளக்குக.

**(03 புள்ளிகள்)**

**ii.** நான்கு (04) வகையான பேச்சு ஒழுங்கீனங்களைக் குறிப்பிட்டு அவற்றில் **இரண்டை** (02) விளக்குக.

**(05 புள்ளிகள்)**

**iii.** பேச்சு மற்றும் மொழி ஒழுங்கீனங்கள் தொடர்பாக எழக்கூடிய சமூக மற்றும் மனவெழுச்சிப் பிரச்சினைகளை பகுப்பாய்வு செய்க.

**(12 புள்ளிகள்)**

11.

**i.** "ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆற்றல்களின் தொகுதிகளில் சிறந்த திறன்களைக் கொண்டிருத்தல் மீத்திறனாகக் கருதப்படுகின்றது" (Gagne, 1996)

"மீத்திறனானவர்" மற்றும் "திறமை வாய்ந்தவர்" என்ற பதங்களை வரைவிலக்கணப்படுத்துக.

**(03 புள்ளிகள்)**

**ii.** மீத்திறனுள்ள மாணவர்களிடம் காணப்படும் **ஐந்து** (05) குணாதியசங்களைக் குறிப்பிட்டு அவற்றில் **மூன்றைப்** (03) பொருத்தமான எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

**(05 புள்ளிகள்)**

**iii.** திறமையான மற்றும் மீத்திறனுள்ள மாணவர்களை உள்ளடக்கிய வகுப்பறையில் ஆசிரியர்கள் எவ்வாறு அவர்களுக்கு இடமளிக்க முடியும் என்பதை விளக்குக.

**(12 புள்ளிகள்)**

12.

i. உங்கள் சொந்த மொழிநடையில் "உடல் சார் குறைபாடு" என்ற பதத்தை வரைவிலக்கணப்படுத்துக.

**(03 புள்ளிகள்)**

ii. பொதுவான **மூன்று** (03) வகையான உடல் சார் குறைபாடுகளைக் குறிப்பிட்டு அவற்றைச் சுருக்கமாக விளக்குக.

**(05 புள்ளிகள்)**

iii. நீங்கள் பெருமூளை முடக்கு வாதம் உள்ள மாணவர்களுக்கு கல்வி உதவி வழங்கும் ஒரு ஆசிரியராக கற்பனை செய்து கொள்ளுங்கள். கற்றல் தொடர்பாக நீங்கள் அவதானித்த **மூன்று** (03) தடைகளைப் பட்டியலிட்டு, அவற்றிற்கு எவ்வாறு உதவித் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி உதவியளிக்கலாம் என்பதை விளக்குக.

**(12 புள்ளிகள்)**

13.

i. உதாரணங்களைக் குறிப்பிடுவதன் மூலம் குருட்டுத்தன்மை மற்றும் பார்வைக் குறைபாடு ஆகியனவற்றை வேறுபடுத்துக.

**(03 புள்ளிகள்)**

ii. குழந்தைகளிடையே காணப்படும் **மூன்று** (03) பொதுவான பார்வைக் குறைபாடுகளை விளக்குக.

**(05 புள்ளிகள்)**

iii. அ) கற்பித்தற் செயல்முறையின் போது பார்வைக் குறைபாடுள்ள மாணவர்களுக்கு இடமளிப்பதற்கான **ஐந்து** (05) வழிமுறைகளை விவரிக்கவும்.

**(06 புள்ளிகள்)**

ஆ) உள்ளடங்கல் வகுப்பறையில் பார்வைக் குறைபாடுள்ள மாணவர்களுக்குக் கற்பிக்கும் போது நீங்கள் எதிர்கொள்ளும் **ஐந்து** (05) சவால்களைக் குறிப்பிட்டு அந்தச் சவால்களை எவ்வாறு எதிர்கொள்கிறீர்கள் என்பதை விளக்குக.

**(06 புள்ளிகள்)**

14.

i. குறிப்பான கற்றல் இயலாமைகளின் **மூன்று** (03) முக்கிய வகைகளை விவரிக்கவும்.

**(03 புள்ளிகள்)**

ii. "ஆரம்பகால நோயறிதல் மற்றும் ஆரம்பகால தலையீடு கற்றல் இயலாமையின் பாதிப்பின் வீரியத்தைக் குறைக்கலாம்"
மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கற்றல் இயலாமைகளுக்கும் **மூன்று** (03) முன் எச்சரிக்கை அறிகுறிகளைக் குறிப்பிடவும்.

**(05 புள்ளிகள்)**

iii. கற்றல் இயலாமைகள் உள்ள மாணவர்களுக்கு வகுப்பறையில் செயல்படுத்தக்கூடிய சிறந்த நடைமுறைகளின் **ஐந்து** (05) வழிகளை ஆராய்க.

**(12 புள்ளிகள்)**

*- முழுப்பதிப்புரிமை பெற்றது -*